Impact Factor (SJIF): 6.126 E-ISSN: 2583-1615, P-ISSN: 3049-3498

International Journal of Research in Academic World

Received: 02/May/2025 IJRAW: 2025; 4(6):115-117 Accepted: 14/June/2025

# திருக்குறள் உணர்த்தும் வாழ்வியல் கூறுகள்

*[1]ந.கணேசன்

*[1]அரசினர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, புதுப்பதி -மதுக்கரை ஒன்றியம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம்**

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்பது தமிழ் இலக்கியத்தின் சிகரமாக விளங்கும் ஒரு சிறப்பான நூலாகும். இது 1330 குறட்பாக்களைக் கொண்டது. மூன்றாகப் பிரிக்கப்படும் திருக்குறளின் முதல் பகுதி அறத்துப்பால் ஆகும். இதில் வாழ்வியல் அறங்கள் மிக முக்கியமாகக் கூறப்படுகின்றன.திருக்குறளில் வாழ்வியல் அறங்கள், மனித வாழ்க்கையை ஒழுக்கத்துடனும், நன்மையுடனும் நடத்த வழிகாட்டுகின்றன. இவை காலத்திற்கேற்ப மாறாத நிதானமான வாழ்க்கைப் பயிற்சி முறைகள். ஒவ்வொரு மனிதனும் அறங்களைப் பின்பற்றி வாழ்ந்தால் சமுதாய நல்லிணக்கமும், தனிமனிதத்தின் உயர்வும் உறுதி செய்யப்படும்.

**முக்கிய சொல்:** ஒழுக்கம், அறம், அன்பு, இரக்கம், தர்மம், நல்லொழுக்கம்.

## முன்னுரை

திருக்குறள் தமிழில் தோன்றிய தலைசிறந்த நீதி இலக்கியமாகும். ஆணும் பெண்ணும் அன்புடன் இணைந்து வாழ்வதால் தான் உலகம் நிலைத்து நிற்கின்நது. அவர்களின் உண்மையான உறவினால் தான் தனித்தனி குடுபங்கள் தோன்றின. குடும்ப வாழ்வு மக்களிடையே நிலைத்த பிறகுதான் அறமும் அரசியலும் தோன்றின மனிதன் அறநெறியில் நிற்பதற்கும் இன்பத்முடன் வாழ்வதற்கும் செல்வம் இன்றியடையாதது.எனவே தான் அறம் பொருள் அனைத்தும் மக்களது இன்ப வாழ்வுக்குத்தாகும் என்ற அடிப்படையில் முப்பால் பகுப்புக்களைத் திருக்குறள் கொண்டுள்ளது.அறத்துப்பால் தனிமனிதனது வாழ்வின் மேன்மையைக் குறிக்கும்.பொருட்பால் சமுதாய வாழ்வைச் சுட்டிக் காட்டும் காமத்துப்பாலில் அக வாழ்வின் வெற்றியைச் சிறப்புற எடுத்துரைக்கும் எனலாம்.

## இல்லறம்

இந்த உலகம் ஆன் பெண் என்ற இருபாலரையும் கொண்டு இயங்கி வருவதால் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழக்கூடாது என்பதுதான் இல்வாழ்க்கையின் உயிர் தத்துவமாகும்.இத்தகைய இயல்புடைய இல்வாழ்வார்களே தெய்வப் பண்புடையவர்களாகவும் விளங்கி வருகின்றார்கள்.நற்பண்புகளுடன் இல்லறத்தை மேற்கொள்ளும் ஒருவன் இனிய துணையையும் பெற்றுச் சிறக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வள்ளுவர்

மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்-51)

என்பன் வழி வாழ்க்கைத் துணையானவள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் சுட்டுகிறார்.

நல்ல அறிவும் பண்பும் நிறைந்த குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்கள் தங்களது ஏழு பிறவிகளிலும் எத்தகைய துன்பத்தையும் அடையமாட்டார்கள் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.



*Corresponding Author: ந.கணேசன்

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் (குறள்-62)

இல்லறம் என்னும் நல்லறத்தில் முழுமையாக ஈடுபடுபவர்கள் நம்முடன் வாழ்ந்து வரும் மனித தெய்வங்களாக உள்ளனர்.

**அன்பின் வழியது வாழ்க்கை**

அன்பு என்பது மனிதனின் வாழ்வில் முக்கியமான ஒன்று.அன்பு இல்லையேல் வாழ்க்கையே இல்லை எனலாம்.ஒருவன் தன்னை நேசிப்பது போலவே பிறரையும் நேசிக்க வேண்டும் என்ற கருத்தையே அனைத்து நீதி நூல்களும் வலியுறுத்துகின்றன.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (குறள்-80)

பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் மனப்பான்மை கொண்டவர்களே மேன்மக்களாக கருதப்படுவார்கள்.

**விருந்தோம்பும் மாண்பு:**

விருந்தோம்பல் என்பது தமிழர் தம் மாண்பு.இல்லறத்தில் ஈடுபடுபவர்களுடைய கடமைகளில் ஒன்று விருந்தேம்பால்.இல்வாழ்வான் என்பான் தன் குடும்பத்தினரையும் பேணி தன் வீட்டிற்கு வரும் விருந்தினரையுமு; சிறப்புடன் பேண வேண்டும்.ஒருவன் சேர்த்து வைத்தும் செல்வம் தன் குடும்பத்தினர்க்கு மட்டுமல்லாமல் தன்னை நாடிவரும் பிறர்க்கும் பயனளிப்பதாய் அமைதல் வேண்டும்.

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்வதற் பொருட்டு (குறள்-81)

இல்லறம் ஏற்று இல்வாழ்வான் விருந்தோம்பும் மாண்பினை கடைபிடித்து ஒழுகும் போது அது அவனுக்கு மட்டுமல்லாமல் அவனது சந்ததியினருக்கும் பெரும் புண்ணியத்தைச் சேர்க்கும் எனலாம். அவ்விதம் பிறர்க்கு உதவும் நிலையில் நாம் இல்லையென்றாலும் அவர்களது முகம் மலரும் அளவு அவர்களை இனிய சொற்கள் வேசி மகிழ்விக்க முயல வேண்டும்.இதனால் பேசுபவருக்கும் கேட்பவருக்கும் மகிழ்ச்சி உண்டாகும்.ஏனெனில் பிறர்க்கு கொடுத்து உதவுவதைக் காட்டிலும் இனிமையுடையது இன்சொல்லால் அவர்களை மகிழ்விப்பது என்கிறார் வள்ளுவர்.

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின் (குறள்-92)

**நன்றி மறவாமை:-**

இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருடைய வாழ்வும் பிறர் ஒருவரின் உதவியாலேயே நடைபெறுகிறது.அத்தகைய உதவியை நாம் உயிர் உள்ள அளவும் மறந்து விடக் கூடாது.ஏனெனில் தக்க சமயத்தில் ஒருவர் நமக்குச் செய்கின்ற உதவி உலகை விடப் பெரியது.அத்தகைய நன்றியினை நாம் நல்ல நிலைக்கு வந்தவுடன் மறந்தோமேயானால் அதைவிடக் கொடியப் பாவம் உலகில் வேறொன்றும் இல்லை எனலாம்.எந்நாளும் நாம் நன்றி மறவாத வாழ்க்கையை மேற்கொள்ளுதலே சாலச் சிறந்தது என்பதை திருவள்ளுவர் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்நின்றி கொன்ற மகற்கு (குறள்-110)

**தீயொழுக்கம் கூடாதிருத்தல்**

ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் பேற்ற வேண்டும் நல்லொழுக்கம் பெருமையைத் தேடித்தரும் அதே வேளையில் தீயொழுக்கம் மனிதனுக்குத் துன்பத்தைத் தரும்.அந்தத் தீயொழுக்கங்களில் மனிதன் முதலில் நீக்க வேண்டியது பொறாமை எனப் பொருள்படும் அழுக்காறுதான்.ஏனெனில் இதுவே மனிதன் பிற குற்றங்களையெல்லாம் செய்வதற்கு தூண்டு கோலாக அமைகிறது.ஒவ்வொருவரும் தன் நெஞ்சத்திலே பொறாமையுணர்வை உண்டு பண்ணாத வாழ்க்கையை இயல்பாகக் கொண்டு அதையே தன்னுடைய ஒழுக்கத்தின் சிறந்த வழியாகக் கடைபிடிக்க வேண்டும் என்று வள்ளுவர் உணர்த்துகிறது.

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு (குறள்-161)

**இதன்வழி விளங்கும்.**
**புகழ் பெற வாழ்தல்:-**

இல்லறத்தின் பெரும் பயனே புகழ்பெற்று வாழ்தலாகும்.மனிதனாகத் தோன்றியவன் தன்னுடைய வாழ்நாளில் தான் செய்யும் அரிய பணிகளின் மூலம் என்றும் மங்காத புகழைப் பெற்றுச் சிறக்க வேண்டும்.நமது பிறப்பின் நோக்கமே பிறருக்கு உதவுதலாகும்.ஒருவன் தன்னுடைய சிறந்த அறிவாலும் உயர்ந்த திறனாலும் தீது எதுவுமின்றி வாழ்ந்து வர வேண்டும்.அதுவே அவனது வாழ்க்கைக்குப் புகழைத் தேடித் தருவதாகும்.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல் (குறள்-233)

ஒருவன் பிறக்கும் போதே புகழுடன் பிறப்பது என்பது நடவாத காரியம்.இந்த மனிதப் பிறவியில் தனது செயல்களின் மூலம் தான் அவன் புகழ் அடைய வேண்டும்.தனது அறச் செயல்கள் மூலமும் அரிய உழைப்பின் மூலமும் தான் அத்தகைய புகழை அடைய முடியும்.

**ஊக்கமே உயர்வுக்கு வழி:-**

முனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வில் எதையும் எதிர்கொள்ளும் துணிவைப் பெற்றிருக்க வேண்டும்.இத்துணிவே ஊக்கம் எனப்படும்.இத்தகைய ஊக்கம் மட்டும் ஒருவரிடம் இல்லையென்றால் அவர் வேறு எதையும் உடையவராக மாட்டார்.

உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று (குறள்-591)

நம் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நம்முடைய உயர்வான எண்ணங்களே காரணம் ஆகும்.நமது எண்ணங்கள் எப்போதும் உயர்ந்த எண்ணங்களாகவே இருக்க வேண்டும்.தளர்ச்சியடையாமல் முயற்சிகளை மேற்கொண்டு ஊக்கமுடன் உழைப்பவர்களே வாழ்க்கையில் வெற்றி அடையவர்.சோம்பாலை அறவே போக்கி ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னால் வெற்றியடைவோம் என்ற நம்கிக்கையில் தொடங்கும் செயலே நிச்சம் வெற்றியடையும்.

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும; (குறள்-619)

மனிதன் என்னதான் முயன்று முயற்சிகள் மேற்கொண்டாலும் சில நேரங்களில் அதில் தோல்வியும் உண்டாகும்.துன்பங்களும் வரத்தான் செய்யும் அது இயல்பேயாகும்.அதனால் மனம் தளர்ந்து விடக் கூடாது துன்பங்களுக்கு மேல் துன்பங்கள் வந்து கொண்டிருந்தாலும் காலங்காமல் எதிர்த்து நின்று செயல் புரிந்து வந்தால் அத்துன்பங்கள் துன்பம் அடைந்து நம்மை விட்டு ஓடி இன்பம் வந்து சேரும்.

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும் (குறள்-625)

**துணை நூற்பட்டியல்**


1. திருக்குறள் மூலமும் உரையும் - திரு .மு. வரதராசனார்
2. மு. சண்முகம் பிள்ளை, திருக்குறள் அமைப்பும் முறையும், சென்னைப் பல்கலைக் கழகம், 1972.
3. கருவை பழனிசாமி, திருக்குறளில் மரபும் திறனும், திருமொழிப் பதிப்பகம், சென்னை, 2004.
4. எச். இராமசாமி, திருக்குறள் அகராதி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
5. கு. ச. ஆனந்தன், வள்ளுவரின் மெய்யியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு: 1986.
6. சா. கிருட்டினமூர்த்தி (பதிப்பாசிரியர்), இக்கால உலகிற்குத் திருக்குறள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004, 3 தொகுதிகள்.
7. செ. வில்லியம் டெல், குறளும் ஆன்மீகமும், சு. கீதா புத்தகாலயம், திருவள்ளூர், 2002.
8. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, வள்ளுவர் விருந்து, மணிவாசகர் பதிப்பகம், 2003.
9. கு. மோகனராசு, வீ. ஞானசிகாமணி (தொகுப்பாசிரியர்கள்), கிறித்துவர்களின் திருக்குறள் கொடை, மணிவாசகர் பதிப்பகம், 2004.
10. பா. கமலக்கண்ணன், சித்தர் நூல்களில் அகத்தியர், திருவள்ளுவர் வரலாறு, வானதி பதிப்பகம், சென்னை, 1993, 2005.